**கல்வியமைச்சு – E Thaksalawa** **மாதிரி வினாப்பத்திரம் - 01**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2022 (2021)**

**General Certificate of Education (Ord.Level) Examination - 2022 (2021)**

**தமிழ் மொழியும் இலக்கியமும் I, II** **ஒரு மணித்தியாலம்**

**Tamil Language and Literature I, II** **One hours**

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. "ககனசித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர்" - இங்கு **"காயம்"** என்பதன் ஒத்தசொல்
   (1) அடையாளம் (2) வடு (3) உடல் (4) மோட்சம்

2. "பிரிவின் கண் பீழை தருவது ஒன்று இல்"- இங்கு **"பீழை"** என்பதன் ஒத்தசொல்
   (1) வடு (2) கேடு (3) துன்பம் (4) நரகம்

3. "கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும்" - இங்கு **"கேண்மை"** என்பதன் எதிர்ச்சொல்
   (1) நட்பு (2) பகைமை (3) வன்மை (4) கெழுதகைமை

4. மிக்காரைச் சேர்தல் மிகமாண முன் இனிதே - இங்கு **"சேர்தல்"** என்பதன் எதிர்ச்சொல்
   (1) கலத்தல் (2) தங்குதல் (3) பிரிதல் (4) வெட்டுதல்

5. நான் அவ்வண்டையில் பிசகாமல் நின்றிருந்தேன். - இங்கு **"பிசகாமல்"** என்பதன் கருத்து
   (1) விலகாமல் (2) தவறாமல் (3) கலங்காமல் (4) குழம்பாமல்

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.

6. பின்வருவனவற்றில் பொருத்தமற்ற சொற்களின் இணைப்பு
   (1) அல்லுக்குத்து - காதணி (2) படிக்கம் - பாத்திரம்
   (3) ஊறல் - மருந்து (4) துல்லியம் - வெளிச்சம்

7. "காதலிக்கு இன்னொருவரிடத்தில் மையல் ஏற்படுகிறது"
   "மையல் ஒருவன் களித்தற்றால்"
   இங்கு இடம்பெறும் "மையல்" என்னும் சொற்கள் உணர்த்தும் பொருள் முறையே
   (1) கோபம், தலைவன் (2) விருப்பம், மயக்கம்
   (3) சந்தேகம், பேதை (4) பரிதாபம், செருக்கு

8. வேறுபட்ட சொற்களைக் கொண்டமைந்த தொகுதி
   (1) பனை, தாலம், கற்பகதரு
   (2) வரை, மலை, குன்று
   (3) தலைவன், நம்பி, குரிசில்
   (4) கரும்பிறை, மன்மதன், சேயோன்

9. ஆபரணம், வலிமை, அழகு என்னும் பொருள் தரும் ஒரு சொல்
   (1) மஞ்சு (2) மேகம் (3) கலம் (4) அணி

10. கிறிட்டிசம் ( Critism) என்பதற்கு நிகராகத் தமிழில் வழங்கும் கலைச்சொல்
   (1) கிறிஸ்தவம் (2) விமர்சனம் (3) சித்திரம் (4) காலநிலை

11. ஓலை என்ற இலை மரபுக்குள் அடங்காதது.
    (1) தென்னை (2) கரும்பு (3) தாளை (4) கமுகு

12. “அரை நூற்றாண்டுக்கு மேல் இலங்கைச் சட்ட சபையில் ஓரிலங்கைச் சிவப்பாயிருந்து விளங்கினார்.” இங்கு சிவப்பாயிருத்தல் என்ற மரபுத்தொடர் உணர்த்தும் பொருள்
    (1) வெளிப்படை (2) பொதுநிறம் (3) நடுநிலை (4) தெளிவு

13. துறவிகள் வசிக்கும் இடம்
    (1) பள்ளி (2) பன்னசாலை (3) வனம் (4) ஆச்சிரமம்

14. ஒரு நாட்டின் அரசனும் ஒரு நாட்டிலுள்ள பெருஞ்செல்வனும் தமக்குக் கீழ் சேவை புரிவோருக்கு விருப்புடன் வழங்கும் நிலம்.
    (1) மானியம் (2) பொதுவியல் (3) நிந்தகம் (4) பரிசு

15. செல்வங்கள் பெற்றுச் சிறப்புடன் நீடுழி வாழ்க!இவ்வாறு வாழ்த்துவதற்குப் பொருத்தமான அருஞ்சொற்றொடர்
    (1) ஆல்போல் தளைத்து அறுகுபோல் வேரூன்றி
    (2) ஒல்காப்பெரும் புகழ்
    (3) கருவிலே திருவுடையான்
    (4) நுண்மான்நுழைபுலம்

16. அரிச்சந்திர மன்னனின் தியாக வாழ்க்கை பசுமரத்து ஆணி போல் மக்கள் மனதில் பதிந்து விடுகிறது. இங்கு பசுமரத்து ஆணி போல் என்ற உவமைத் தொடரின் கருத்து
    (1) ஆழப்புகுதல் (2) மென்மையாகப் புகுதல்
    (3) நிலை நிறுத்தல் (4) வெளிப்படாதிருத்தல்

17. புதிய தலைமுறை கணிப்பொறி பற்றி நீண்ட விவாதங்களும் பட்டிமன்றமும் நடத்தினார்கள். இங்கு விவாதம் என்பதன் கருத்து
    (1) எடுத்துக் கொண்ட பொருளைப் பலர் மத்தியில் நகைசுவையாகப் பேசுவது
    (2) பலர் மத்தியில் ஒருவர் உரக்கப்பேசுவது
    (3) ஒரு விடயம் தொடர்பாக, சார்பாகவும் எதிராகவும் முன்வைக்கப்படும் சொற்போர்
    (4) கருத்துக்களைக் கூவெற்றி பெறுவதற்காக முன்வைப்பது

18. எந்த நிலையிலும் ஒருவர் தனக்கான சூழலைத் தேடிக்கொள்வது இயல்பானதாகும். இன்பத்திலும் துன்பத்திலும் இந்த நிலை ஏற்படுவது வழக்கம். என்பதை வெளிப்படுத்தி நிற்கும் பழமொழி
    (1) இலையும் பழுப்பும் எங்குமுண்டு
    (2) இனம் இனத்தைச் சேரும்
    (3) ஊரோடு ஒத்து வாழ்
    (4) கெடுகுடி சொற்கேளாது

19. வெண்ணிறமேகங்கள் நிலவை மூடிமூடி ஆலிங்கனம் செய்கையில். இங்கு ‘மூடிமூடி’ என்பது
    (1) இரட்டைக் கிளவி (2) அடுக்குத்தொடர்
    (3) அடுக்கிடுக்குத் தொடர் (4) இணைமொழி

20. (அ) தமிழ் பக்தியின் மொழி
    (ஆ) பக்தி இலக்கியம் போல் வேறெந்த மொழியையும் நான் அறியேன்
    மேற்படி வாக்கியங்களை இணைப்பதற்கு பொருத்தமான இணைப்பிடைச்சொல்
    (1) அத்துடன் (2) அதிலும் (3) ஏனெனில் (4) ஆகவே

- பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

21. ககரம் (ம) என்ற எழுத்துக்கு நிகராக ஒலிக்கும் சொல்
    (1) மங்கை (2) கடல் (3) அகம் (4) தேகம்

22. பின்வருவனவற்றில் உரிச்சொல்லை அடிச்சொல்லாகக் கொண்டமைந்த வினைச் சொல்
    (1) மாண்டான் (2) சித்திரம் (3) போன்றான் (4) வந்தான்

23. பின்வருவனவற்றில் தொழிற்பெயர் விகுதி கொண்டமைந்த சொல்
    (1) ஆடினாள் (2) தேட்டம் (3) செய்யும் (4) நன்மை

24. பின்வருவனவற்றில் கூட்டுவினையடை கொண்டமைந்த சொல்
    (1) சுவையுள்ள (2) வேகமான (3) விரைவாக (4) சிவந்த

25. கெடுதல் புணர்ச்சி இடம்பெற்ற சொல்
    (1) கல்லால் (2) சிறகால் (3) கற்சிலை (4) தேனருவி

26. பின்வருவனவற்றில் வேற்றுமைத் தொகையாய் அமைந்த சொல்
    (1) பொதுப்பாடசாலை (2) பாரிய பாடசாலை
    (3) பழைய பாடசாலை (4) எங்கள் பாடசாலை

27. கடிநகர் சென்றான். இங்கு "கடி" என்னும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்
    (1) காவல் (2) பெரிய (3) புதிய (4) வாசனை

28. "படரெல்லாம் படைத்தாளை பழிவளர்க்கும்......" இங்கு படைத்தாளை என்பது
    (1) ஆக்கப்பெயர் (2) படர்க்கை வினைமுற்று
    (3) வினையாலணையும் பெயர் (4) காரணப்பெயர்

- பொருத்தமற்ற உதாரணம் இடம் பெற்றுள்ள சொற்தொகுதியைத் தெரிவு செய்க.

29. (1) தன்மை வினை - நடந்தேன், சென்றேன், பார்த்தேன்
    (2) முன்னிலை வினை - அழிவாய், செய்யுங்கள், குளிப்பான்
    (3) படர்க்கை வினை - ஓடுவான், உண்பான், பாய்கின்றான்
    (4) கூட்டுவினை - கட்டிப்பிடித்தான், முன்னேறினான், ஓடிப்பிடித்தான்

30. (1) இடுகுறிப்பெயர் - மரம், கடல், மண்
    (2) காரணப்பெயர் - மண்வெட்டி, காதணி, மீன்கொத்தி
    (3) காரணஇடுகுறிப்பெயர் - அந்தணன், முள்ளி, பாக்குவெட்டி
    (4) பொதுப்பெயர் - மேதை, விவேகி, ஆசிரியர்

- புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

31. ஒன்றோ பலவோ வயலிற் புகுந்த ......................
    (1) பன்றிகள் (2) பன்றி (3) பன்றிக் கூட்டம் (4) பன்றியினர்

32. யானை பலகாலம் ............................. தனக்கு உணவு கொடுத்த பாகனையே கொல்லும்
    (1) வாழ்ந்திருத்தும் (2) சென்றிருந்தும் (3) பயின்றிருந்தும் (4) உண்டிருந்தும்

33. அதிபர், பெற்றோர்களுக்கான கூட்டம் எதிர்வரும் மாதம் இடம்பெறுமென.....................
(1) அறிவித்தார் (2) நிறுத்திவைத்தார்
(3) முடக்கிவைத்தார் (4) அறிவுறுத்தினார்

- வாக்கியத்தின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க

34. அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும் என்ற உண்மை....................
(1) உணரப்படவேண்டியன (2) உணரத்தக்கவை
(3) உணரத்தக்கன (4) உணரப்படவேண்டியது

35. திருவிழாவிற்கு மக்கள் கூட்டம் அலை அலை எனத்திரண்டு.....................
(1) வந்தனர் (2) வந்தன (3) வந்தது (4) வந்தவை

- கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக

ஓடி வருகையிலே கண்ணம்மா உள்ளங்குளிருதடி
ஆடித்திரிதல் கண்டால் உன்னைப் போய் ஆவி தழுவுதடி
கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளந்தான் கள்வெறி கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ கண்ணம்மா உன்மத்தமாகுதடி

36. இப்பாடல் விவரிக்கும் விடயம்
(1) அன்பு (2) பிரிவு (3) வெறுப்பு (4) பக்தி

37. திரிதல் என்பது எவ்வகைப் பெயர்
(1) ஆக்கப்பெயர் (2) தொழிற்பெயர் (3) கூட்டுப்பெயர் (4) பொதுப்பெயர்

38. உள்ளம் கள்வெறி கொள்ளக்காரணம்
(1) ஆடித்திரிதல் (2) ஆவிதழுவுதல்
(3) கன்னத்தில் முத்தமிடல் (4) கண்ணம்மாவைக் காணுதல்

39. கண்டால் என்பதன் பகுதி யாது
(1) கண் (2) கண்ட (3) கண்டு (4) காண்

40. கீழே, சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெறவைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ப பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

(அ) அத்துடன் விவிலிய காலத்திலும் மேல்நாட்டார் தமிழ் நாட்டிற்கு வந்து சென்றுள்ளனர்.
(ஆ) இந்த யாதகக் குறிப்புக்களை எபிதேய மொழியிலும் கண்டு கொள்ளலாம்.
(இ) இச்செய்தி பாளி மொழியிலுள்ள பல்வேறு யாதகத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.
(ஈ) அவர்கள் இங்குள்ள பொருட்களைக் கொண்டு சென்று வணிகஞ் செய்து வந்தனர்.
(உ) பண்டைக் காலத்தில் தமிழர் மேல் நாட்டாரோடு வணிகத் தொடர்பு வைத்திருந்தனர்.

(1) (உ), (ஆ), (ஈ), (அ), (இ) (2) (உ), (ஆ), (ஈ), (இ), (அ)
(3) (உ), (ஈ), (இ), (ஆ), (அ) (4) (உ), (அ), (ஈ), (இ), (ஆ)

40 x 1 =40 புள்ளிகள்

**கல்வியமைச்சு – E Thaksalawa** **மாதிரி வினாப்பத்திரம் - 02**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2022 (2021)**

**General Certificate of Education (Ord.Level) Examination - 2022 (2021)**

**தமிழ் மொழியும் இலக்கியமும் I, II**

**Tamil Language and Literature I, II**

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

**கவனிக்க :**

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

ii. இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

1. சுருக்கமான விடை எழுதுக.

i. பின்வரும் தொடரை சந்திபிரித்து எழுதுக.

"வான்றூண்டைத் தோன்றிய மாநரசிங்கம் மென்ன"

ii. " உம்மிலை என்ன கிடைக்குது பார்கிறதுக்கு ஓகோ அப்பிடியோ உமக்கு யோசனை" என்ற பேச்சு வழக்கு வாக்கியத்தை எழுத்து வழக்காக மாற்றி எழுதுக

iii. பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளையிட்டு அதனை மீண்டும் எழுதுக

பெண்டிர் தன்மையுடையீர் பெண்பாவமன்றோ பெரிய வசை கொள்வீரோ

iv. பின்வரும் வாக்கியத்தின் எழுவாய், பயனிலை என்வற்றைக் குறிப்பிடுக

"தோட்டத்திலே வேலை கிடக்கு என்று அவசரத்தில் சொல்லிவிட்டு எடுத்தேன் ஓட்டம்"

v. பின்வருவனவற்றுள் விவாதத்தில் தவிர்க்கப்பட வேண்டியவற்றை தெரிவு செய்து எழுதுக

கூறியது கூறல், கவர்ச்சிகரமாகப் பேசுதல், சார்புக் கருத்தை முன்வைத்தல், குறுக்கிட்டுப் பேசுதல். முன்பின்முரணாகக் கூறல்

vi. பொருத்தமான இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்தி பின்வரும் வாக்கியங்களை இணைத்து ஒரே வாக்கியமாக்குக.

நீ அந்த விழாவிற்கு வந்திருந்தாய்.
உன்னை நான் காணவில்லை.

vii. மதி எனும் சொல் பெயராகவும் வினையாகவும் அமையுமாறு இரு வாக்கியங்கள் எழுதுக.

viii. அ. அனைவருக்கும் தமிழத்தாயின் இனிய வந்தனங்கள் பாரதி வித்தியாலயம் யாவரும் பாதுகாக்க வேண்டிய கலையகமாகும்.

ஆ. நாளை முதல் மாணவர்கள் யாவரும் இசையுடன் இணைந்தே தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட வேண்டும்.

இவ்விரு வாக்கியங்களிலும் அறிவித்தலாக அமைந்த வாக்கியம் எது? அறிவுறுத்தலாக அமைந்த வாக்கியம் எது?

ix. "முன்னாலே மகுடத்தை தரையில் வைத்துஞான மகன் நிறைவுடன், ஞானமெல்லாம் ஓர் பொழுது நடுங்கிற்றம்மா" என்பதில் இடம்பெறும் அணி எது?

x. நீ கவனமாக நடந்து வந்தால், ஆற்றைக் கடந்து போவாய். இவற்றில் இடபெறும் தலைமைதொடர் மற்றும் எச்சத்தொடர் என்பனவற்றை வேறுப்படுத்தி எழுதிக் காட்டுக

(20 புள்ளிகள்)

[பக்.2 ஐப் பார்க்க

2. பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவு செய்து ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடையெழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்கு பொருத்தமான தலைப்பு இடுக.

i. விஞ்ஞானத்தின் விந்தைகளான, கண்டுபிடிப்புக்கள் எண்ணிறைந்தன. அவற்றுள்ளே நவீன தொலைத்தொடர்புக்கு பயன்படுத்தும் கைதொலைபேசியும் ஒன்று. இன்று எமது நாட்டின் மக்கள் மத்தியிலும் மாணவர் மத்தியிலும் அதிகமாக பயன்படுத்தும் சாதனமாக மாறியுள்ளன. இச்சாதனம் அனர்த்தகால கற்றல் ஊடகமாகவும் பயன்படுத்தப்பட்டாலும் இவற்றில் நன்மையைவிட தீமைகள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன இவ்வாறான சூழ்நிலையில் கைதொலைபேசிகளால் ஏற்படும் பாதிப்புக்களையும் அவற்றில் இருந்து மீண்டு வருவதற்க்கான வழிமுறைகள் என்பனவற்றறை குறிப்பிட்டு **விளக்கக்கட்டுரை**

ii. இன்று நாட்டில் நடைபெறும் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களால் இயற்கை அழிக்கப்பட்டு வருகின்றது. இதனால் காடுகள், நிலம், நீர், கடல், வளி என்பனவற்றில் பாதிப்பு ஏற்பட்டு இயற்கை சமநிலையில் மாற்றம் ஏற்படுகின்றன. இப்பாதிப்புக்களால் நிலநடுக்கம், மண்சரிவு, வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு இயற்கையால் மனிதன் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் இயற்கை சமநிலையைப் பேண வேண்டியதன் அவசியம் தேவையின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. எனவே, இவற்றினைக் கருத்திற் கொண்டு இயற்கைப் பாதுகாப்பு முறைகள், அதனைப் பாதுகாக்கும் வழிமுறைகள் என்பனவற்றை முன்வைக்கும் வகையில் நீர் ஆற்றும் **மேடைபேச்சு.**

iii. இன்று மாணவர்களிடத்தில் பாரம்பாரிய உணவு பழக்கம் அருகிக் கொண்டு வருகின்றன வீட்டில் தயாரிப்பதனை விட துரித உணவு மென் பாணங்கள் சிறந்தது மற்றும் சுவையானது என்ற எண்ணம் அதிகரித்து வருகின்றன. இதனால் உடல் பருமன் அதிகரிப்பதுடன் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து வருகிறது. எனவே, வீட்டில் தயாரிக்கும் உணவு சிறந்தது, அந்தப் பழக்கம் நன்மை அதிகம் என வாதிடும் ஒருவருக்கும் தொழினுட்ப துரித உலகில் துரித உணவு சிறந்தது. என வாதிடும் இன்னொவருக்கும் இடையில் நடைபெறும் **உரையாடல்.**

iv. கமல் படிப்பிலே மிகவும் கெட்டிக்காரனாகவும் நல்லபிப்பிராயத்துக்கும் உரியவனாக திகழ்கின்றான். ஆனால், விதி செய்த சதியாலே என்னவோ அவனுக்கு தீயோர் நட்பு ஏற்பட்டது. தீய பழக்கங்களுக்கு அடிமையானவன் கல்வியில் அக்கறை காட்ட முடியாதவனாக பரீட்சையில் தோல்வியை சந்தித்தான். காலத்தின் தவறை உணரும் சந்தர்ப்பம் ஏற்பட்டு திருந்தினான். ஆனால், போனது திரும்பி வருமா? தன்னுடைய தகுதிக்கு ஏற்ற சாதாரண தொழில் ஒன்றை அவனால் தேட முடிந்தது. அவன் நல்லவனாக வருவாய்க்கு தக்கப்படி வாழ்கின்றான். ஆனால், தான் இழந்ததைப் பற்றிய கவலை அவனது மனதில் இருந்துக் கொண்டே இருக்கிறது தீடீரென ஒரு மாற்றம் நானும் சமூகத்தில் பேசப்படும் மனிதனாக வாழவேண்டும். அதனால் முயற்சி தவறலாம். முயற்சிக்க தவறலாமோ? என்ற எண்ணம் உள்ளத்தில் எழுகிறது என்ற எண்ணப் போக்கில் அமையும் ஒரு **சிறுகதை**

(25 புள்ளிகள்)

3. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)

தகவல் பெறுவதற்கு முக்கியமான ஒரு வழி வாசிப்பாகும். ஆகவே ஏனைய அனைத்துக் கல்விசார் திறன்களுக்கும் அடிப்படையானது வாசிப்பு என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும். அத்துடன் ஒரு மனிதனை விடயம் தெரிந்த, அறிவு பெற்ற மனிதனாக உருவாக்கும் ஒரு மனிதன் தான் வேலை செய்யும் இடத்தில் திறன்பட செயற்படுவதற்கும் வினைத்திறனுடன் வேலையை செய்வதற்கும் வாசிப்பு அவசியம். தற்கால உலகத்தில் திறமையாகத் தொழிற்படுவதற்கு வாசிப்பு ஒரு அடிப்படைத் தேவையாகும். இவ்வடிப்படைத் திறன் இல்லாவிடின் விரக்தி, கோபம், பயம் போனற் உளரீதியான பாதிப்புக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. சிறந்த உளவிருத்திக்கு வாசிப்பு அவசியமாகும். ஒரு நல்ல தொழிலை பெறுவதற்கும் அதிக வாசிப்புப்பழக்கம் உறுதுணையாக இருக்கும். குறைந்த வாசிப்புத் திறனுள்ளவர்களால் ஒரு விடயத்தை கிரகிப்பதற்கும் ஒர் அறிக்கை, செய்தியை வாசித்து விளக்குவற்கும் பதிலளிப்பதற்கும் அதிக நேரத்தை செலவிட வேண்டி ஏற்படும். போதிய வாசிப்பும் கிரகித்தலும் இன்றேல் ஒரு தனி நபரின் அடைவுமட்டம் குறைவாகவே இருக்கும். புதிய விடயங்களையும் அறிந்துக்கொள்ள வாசிப்பு இன்றியமையாதது. விசேடமாக வாசிப்பதன், மூலம் பல நன்மைகளைப் பெறலாம். மொழித்திறன் விருத்தி, சொல்வன்மை, சொல்லாட்சி என்பன விருத்தியடைகின்றது. வாசிப்பின் மூலம் சிறு பிள்ளைகளுடைய மொழித்திறன் விருத்தியும் கேட்டல் திறனும் அதிகரிக்கின்றது. அவதானித்துக்கேட்டல் குறைவாகவுள்ளவர்கள் தொழிலும் வாழ்க்கையிலும் பலவற்றை இழக்கவேண்டி ஏற்படும். ஏனையவர்கள் தொடர்பு கொள்ள அல்லது எடுத்துக்காட்ட முனையும் விடயம் என்ன என்பதை சிறந்த வாசிப்புள்ளவர்கள் இலகுவாக விளங்கிக்கொள்வார்கள்.

(10 புள்ளிகள்)

[பக்.3 ஐப் பார்க்க

4. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

எந்த ஒரு கலையோ இலக்கியமோ உண்மையாகச் செழித்து வளர வேண்டுமாயின். அது பேரியக்கமொன்றின் அம்சமாக இருத்தல் அவசியம். நாட்டுப் பாடல் வளர்ச்சியும் இவ்விதிக்கு விலக்கன்று. உழைக்கும் மக்களின் இலக்கியம் நாட்டுப் பாடகளாம். பல்வேறு காலமாகச் சமூகத்திலே நசுக்கப்பட்டு வந்துள்ள அவர்களது ஆவேசமும், உரிமைக் குரலும் நாட்டுப் பாடல்களில் ஒலிப்பதுண்டு. இன்ப துன்பங்களைச் சித்தரிக்கும் பாடகளின் அடிநாதமாக அவர்களது கண்ணோட்டம் அமைந்துள்ளது.அது நம்பிக்கையோடு எதிர்காலத்தை நோக்கும் கண்ணோட்டமாகும். அந்தக் கண்ணோட்டத்தை ஆதாராமாகக்கொண்டு எமது காலத்துச் சமூக இயக்கங்களில் நாட்டுப்பாடல் முதவியவற்றைக் கலந்தால் நிச்சயம் அவை புதிய வாழ்வு பெறும். ஆனால் அவ்வாறு செய்தால் அதன் ''துய்மை'' கெட்டுவிடும் எனச் சிலர் பிரலாபிப்பர்.

எனினும் இன்று இங்கிலாந்து. அமெரிக்கா முதலிய நாடுகளிலே நாட்டுப்பாடல் இயக்கம் மிகவும் செழித்து வளரக் காண்கிறோம். முன்னெப்பொழுதுமில்லாத அளவு பாடல்கள் இயற்றப்படுகின்றன. கச்சேர்களிலும் அரங்குகளிலும் கலைஞர்கள் புதிய புதிய நாட்டுப் பாடல்களைப் பாடி பல்லாயிரக்கணக்கான மக்களைப் பரவசத்திலாழ்த்தி வருகின்றனர். அதன் இரகசியம் என்ன ? வேறொன்றுமில்லை. அணு ஆயத எதிர்ப்பு. சமாதானக் கோரிக்கை, அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு பலவிதமான உரிமைப் போராட்டம் முதலிய இயக்கங்களில் ஈடுபட்டுழைக்கும் ஆயிரங்கணக்கான இளைஞரும் , பிறரும் தமக்குப் பொழுது போக்காகவும், தமது கருத்துக்களைப் பிறருக்கு எடுத்துரைக்கும் முகமாகவும் நாடோடிப் பாடல் மெட்டுகளில் புதிய உள்ளடக்கத்தைப் பெய்கின்றனர். பழைய மெட்டுக்கள் ஏற்கனவே மக்கள் நெஞ்சில் நிலைத்திருப்பனவாகையால் விரைவில் புதிய பாடல்கள் யாவராலும் பாடப் பெறுகிறன. பழைய சாடியில் புதிய மது வார்க்கப்படுகின்றது. இரண்டும் சிறப்புப் பெறுகின்றன. இதிலொன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

i. நாட்டுப் பாடல்களில் ஆங்காங்கே ஒலிக்கப்படும் விடயங்கள் என்ன?

ii. நாட்டுப் பாடல் புதிய வாழ்வு பெற கூறும் வழி என்ன?

iii. நாட்டுப் பாடல் இன்றும் செழித்து வளரும் நாடுகள் எவையென கட்டுரையாளர் எடுத்துக்காட்டுகிறார்?

iv. நாடோடிப் பாடல்களில் புதிய மெட்டு புதிய உள்ளடக்கத்தை என்பவற்றை எடுத்துக்காட்டும் விடயங்கள் என்ன?

v. ''பழைய சாடியில் புதிய மது வார்க்கப்படுகிறது'' என்ற தொடரின் பொருள் **உணர்த்தாத** கூற்று எது?

அ. பழைய நாட்டார் மெட்டுக்களில் புதிய பாடல் பாடப்படுவது

ஆ. மக்கள் மனதில் நிலைத்திருக்கும் பழைய மெட்டில் புதிய பாடல் பாடப்படுவது

இ. பழைய நாட்டார் மெட்டுக்களில் புதிய பாடல் பாடபடுவதன்று.

ஈ. பழைய நாட்டார் மெட்டுக்களில் புதிய உள்ளடக்கம் கொண்டு பாடப்படுவது

(10 புள்ளிகள்)

5. கீழ்வரும் தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்து 100 சொற்களுக்கு குறையாது எழுதுக.

i. நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் ஒவ்வொரு மனிதனும் சிக்கனம் .உழைப்பு உற்பத்தி அதற்ககான ஊக்குவிப்புக்களும் முதன்மைப்படுத்தப்படுகின்றன. இவற்றினை பாடசாலைமட்டத்திலும் முன்னெடுக்கப்பட வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் உமது பாடசாலையின் விவசாய மன்றத்தின் தலைவராக உம்மைக் கருத்திற் கொண்டு இவற்றில் இருந்து

- மாணவர் பெறும் அனுபவம்
- நெருக்கடியில் உற்பத்தியால் ஏற்படும் நன்மைகள்
- பாடசாலைக்குக் கிடைக்கின்ற நன்மைகள்
- நாட்டின் எதிர்காலத்தில் இத்திட்டதால் கிடைக்ககூடிய நன்மைகள்

என்பனவற்றை உள்ளடக்கிய வகையில் தேவையான உதவிகளை வழங்கக்கோரி உமது பிரதேச செயவாளருக்கு **100** சொற்களில் **கடிதம்** எழுதுக

**அல்லது**

ii. கொரோனா நோய் தாக்கத்தில் இருந்து பாதுகாப்பு பெற மேற்கொள்ள வேண்டிய சுகாதார வழிமுறைகளை மாணவரிடம் ஏற்படுத்தும்

- மாணவர் மேற்கொள்ள வேண்டிய சுகாதார பழக்கங்கள்
- மாணவருக்கு ஏற்படும் நன்மைகள்
- நாட்டிற்கு ஏற்படும் நன்மைகள்

என்பனவற்றை உள்ளடக்கும் வகையில் **100** சொற்கள் கொண்ட **துண்டுப் பிரசுரம்** ஒன்றை தயாரிக்குக.

(15 புள்ளிகள்)

***

**கல்வியமைச்சு – E Thaksalawa** மாதிரி வினாப்பத்திரம் - 02

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2022 (2021)**

**General Certificate of Education (Ord.Level) Examination - 2022 (2021)**

**தமிழ் மொழியும் இலக்கியமும் III** இரண்டு மணித்தியாலம்

**Tamil Language and Literature III** **Two hours**

## தமிழ் மொழியும் இலக்கியமும் III

**கவனிக்க :**
- அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை தருக.

i. ‘கண்ணை மறைத் தேகொடுபோய்க் காட்டில்விடும்
பூனையைப் போற் பெண்ணை மனையடைத்து…’

அ. இவ்வரிகள் மூலம் வெளிப்படுத்தப்படுவது யாது?

ஆ. இங்கு பயின்றுள்ள அணி யாது?

ii. ‘இதோ நாம் விளையாடிய மரப்பாச்சிகள்… நாம்
பல்லாலே கடிச்ச தடயங்கள் கூட இருக்கு..

அ. இவ்வாறு கூறியவர் யார்?

ஆ. ‘மரப்பாச்சி’ என்பதன் பொருள் யாது?

iii. ‘அனுபவம் பழுத்த அவவிடம் அறிவு தேஜஸ்
சட்டெனத் தெரியும்.’

அ. இவ்வாறு சிறப்பிக்கப்படுபவர் யார்?

ஆ. ‘தேஜஸ்’என்பதன் பொருள் யாது?

iv. ‘பெரிது இனிது பேதையார் கேண்மை பிரிவின் கண்
பீழை தருவது ஒன்று இல்’

அ. பேதையருடன் கொள்ளும் நட்பு எத்தகையது?

ஆ. ‘பீழை’ என்பதன் பொருள் யாது?

v. ‘யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும்’

அ. இங்கு ‘ஒரீஇ’ என்பதன் பொருள் யாது?

ஆ. எப்படிப்பட்ட நட்பைத் தழுவ வேண்டும் என ஆசிரியர் கூறுகின்றார்?

vi. ‘அது தன்னிடமுள்ள சூட்சுமத்தை எல்லாம்
மெல்ல மெல்ல அவிழ்த்து விடத் தொடங்கியது’

அ. இங்கு ‘அது’ எனச் சுட்டப்படுவது எது?

ஆ. ‘சூட்சுமம்’ என்பதன் பொருள் யாது?

vii. 'கழியும் பிழைபொருட்டள்ளி நன்னூலாங் கடலினுண்டு…'

அ. இப்பாடலைப் பாடியவர் யார்?

ஆ. இங்கு இடம்பெற்றுள்ள அணி யாது?

viii. 'பணிந்து இரந்து புவி பெற்று உண்டிருப்பதற்கே துணிகின்றான்…'

அ. இக்கூற்றைக் கூறியவர் யார்?

ஆ. இக்கூற்று இடம்பெறும் நூல் எது?

ix. 'வேத மூன்றும் பலாவுள்ள நாடு
விசேஷ மூன்றுங் குலாவுள்ள நாடு..'

அ. வேதங்கள் மூன்றாக அமைந்துள்ள விடயங்கள் எவை?

ஆ. விசேஷங்கள் மூன்றும் எவை?

x. 'வேறு காலகட்டத்தில் வேறு இடத்தில் நிகழ்பவை என்பதை மயங்கித்தெளிதல் மூலமாகவும் 'இருண்டு தெளிதல்' மூலமாகவும் கூறலாம்.'

அ. மயங்கித்தெளிதல் என்றால் என்ன?

ஆ. இரண்டு தெளிதல் என்றால் என்ன?

(20 புள்ளிகள்)

2. பின்வரும் செய்யுள் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

i. வயிரம் எனும் சுடு நெருப்பை மிக மூட்டி
வளர்க்கின் உயர் வரைக்காடு என்ன
செயிர் அமரில் வெகுளி பொர சேர இரு
திறத்தேமும் சென்று மாள்வோம்
கயிரவமும் தாமரையும் கமழ்பழனக்
குருநாட்டில் கலந்து வாழ
உயிர் அனையாய் சந்துபட உரைத்தருள் என்றான்
அறத்தின் உருவம் போல்வான்

அ. இங்கு இடம்பெறும் அணியைக் குறிப்பிட்டு, விளக்குக.

ஆ. குருநாட்டின் சிறப்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது?

ii. ஆற்றோடு ஆற்றுநீர் அலைந்து வருமாப்போல்
அதன்பிறகே புள்ளுத் தொடர்ந்து வருமாப்போல்
சேற்றோடு வெள்ளம் தெளிந்து வருமாப்போல்
செங்கால் நாரையினம் மேய்ந்து வருமாப்போல்
சினந்தரிவி வெட்டும் இளந்தாரிமாரை
கண்ணூறு படாமற் காரும் ஐயனாரே

அ. அரிவிவெட்டும் இளந்தாரிமாருக்கு உமையாகக் கூறப்படுபவை யாவை?

ஆ. இப்பாடலில் இடம்பெற்றுள்ள கிராமிய நம்பிக்கை யாது?

iii. தண்டா மரையினுடன் பிறந்தும் தண்டேன்
நுகரா மண்டுகம்
வண்டோ கானகத் திடையிருந்து வந்து
கமல மதுவுண்ணும்
பண்டே பழகியிருந்தாலும் அறியார்
புல்லர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற்
கலப்பர் கற்றோரே

அ. அறிவுடையோர், அறிவற்றோர் இயல்பினைக் குறிப்பிடுக.
ஆ. இங்கு கையாளப்பட்டுள்ள அணியை விளக்குக.

iv. சினிமா, திரைப்படமாக்கப்பட்ட நாடகம் அல்ல. இது ஒரு அடிப்படையான வித்தியாசம். நிகழ்ச்சி ஒன்றை அவையோரின் முன் நிகழ்த்திக் காண்பிப்பது நாடகம். சினிமாவின் தன்மையே வேறு. தமிழ் நாட்டில் சினிமா வளராததற்கு ஒரு முக்கிய காரணம், அது நாடகத்திற்கு அடிமைப்பட்டு இருப்பதுதான். இதற்கு வரலாற்று ரீதியான காரணங்கள் உண்டு. பேசும் படத்தின் ஆரம்ப கட்டத்தினைப் பார்ப்போம். அன்று (1930 களில்) பிரபலமாக இருந்த புராண நாடகங்களே படமாக்கப்பட்டன. நாடக மேடை மாதிரியே செட் போடப்பட்டு காமிராவை முன்னால் வைத்து நாடகம் நடிக்கப்பட்டு நாடகம் பார்ப்போரின் கோணத்திலிருந்து அது படமாக்கப்பட்டது.

அ. தமிழ்நாட்டில் சினிமா வளராமைக்கான காரணம் யாது?
ஆ. புராண நாடகங்கள் எவ்வாறு படமாக்கப்பட்டன?

v. இப்போ பகல் பொழுதுகளில் ஈத்திலைக் குப்பை மேட்டில் ஏறிநின்று.. உமணர்கள் ஓட்டுகின்ற உப்பு வண்டியை எண்ணுறாங்க. வரகும் எள்ளும் முளைச்சு முதிர்ந்து கிடக்கிற இந்தப் புன்செய்களை விட்டுட்டுப்போக வேண்டியதுதான். நிலத்தில் புதைக்கப்பட்டு வெளியே எடுத்த கள்ளை ஒவ்வொரு குடிசையாய்ப் பகிர்வார்களே.. கள் மணக்கும் இந்தக் குடிசைகளை விட்டுட்டுப் போக வேண்டியதுதான்.

அ. இக்கூற்று எத்தகைய மனநிலையில் பாரிமகளிரால் கூறப்பட்டது?
ஆ. பறம்பு மலைநாட்டின் வளச்சிறப்பினைக் குறிப்பிடுக.

(20 புள்ளிகள்)

**3. குகப்படலப் பகுதியில்,**

அ. கோசலையின் அறிமுகம்
ஆ. கம்பரின் கவித்துவச் சிறப்பு
ஆகியன பற்றி விளக்குக.

**அல்லது**

**சங்கப்பாடல்களை** அடிப்படையாகக் கொண்டு,

அ. **'தச்சன் செய்த..'** என்ற பாடலில் தலைவன் வராதவிடத்தும் தலைவி அடைந்த இன்பம்
ஆ. **'இனிநினைந்து..'** என்ற பாடலில் இளமைக்காலச் செயற்பாடுகள்

என்பன புலப்படுமாற்றை தெளிவுறுத்துக. (15 புள்ளிகள்)

முழுப் பதிப்புரிமையுடையது All Rights Reserved 

4. **எது நல்ல சினிமா** என்ற கட்டுரையில்,

அ. சினிமா மொழி

ஆ. தமிழ் சினிமாவின் குறைபாடுகள்

ஆகியவற்றை விபரிக்குக.

**அல்லது**

**இலட்சியமும் சமநோக்கும்** என்ற கட்டுரையில்,

அ. இலட்சியமும் சமூக உருவாக்கமும்

ஆ. தர்மபுத்திரரின் இலட்சியநெறி

என்பவற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

- **5,6,7** ஆகிய வினாக்களுள் ஏதாவதொன்றைத் தெரிவுசெய்து விடை எழுதுக.

5. **மூத்தம்மா** சிறுகதையில்,

அ. மூத்தம்மாவின் குணப்பண்புகள்

ஆ. கிராமத்துப் பழக்கவழக்கங்கள்

ஆகியன பற்றி விபரிக்குக.

6. **சீறி ஓடாத வருங்கால மனிதநதி** எனும் கவிதையில்,

அ. இளைஞனைப் பற்றிய கவிஞரின் கவலை

ஆ. எழுத்தறிவின்மையால் இளைஞன் எதிர்நோக்கும் சவால்கள்

போன்றன பற்றி விளக்குக.

7. **தனிப்பாடல்களை** அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ. '**கழியும் பிழைபொருட்டள்ளி…**' என்ற பாடலில் காளமேகப் புலவரின் கவித்திறன்

ஆ. **'ஆடிக்குடத்தடையும்..'** என்ற பாடலில் பாம்புக்கும் எள்ளுக்குமான ஒற்றுமைகள்

(10 புள்ளிகள்)

***